2017 ஜூலை 3]

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வினா வரிசை எண் 119, மாண்புமிகு உறுப்பினர் திரு. மு. திராவிடமணி, மாண்புமிகு தொழிலாளர் நலத் துறை அமைச்சர் அவர்கள்.*

119—

தொழிலாளர் நீதிமன்றம்

***1135—திரு. மு. திராவிடமணி:**

மாண்புமிகு தொழிலாளர் நலத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

நீலகிரி மாவட்டம், உதகமண்டலம் அல்லது கூடலூரில் தொழிலாளர் நீதிமன்றம் அமைக்க அரசு ஆவன செய்யுமா?

மாண்புமிகு டாக்டர் (திருமதி) நிலோபர் கபில், தொழிலாளர் நலத் துறை அமைச்சர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,*

நீலகிரி மாவட்டம், உதகமண்டலம் அல்லது கூடலூரில் தொழிலாளர் நல நீதிமன்றம் புதியதாக அமைக்கும் செயற்குறிப்பு எதுவும் அரசின் பரிசீலனையில் இல்லை என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. மு. திராவிடமணி அவர்கள்.*

திரு. மு. திராவிடமணி: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நீலகிரி மாவட்டத்தில் கிட்டத்தட்ட ஒரு இலட்சத்திற்கும் மேல் தோட்டத் தொழிலாளர்கள் இருக்கின்றார்கள். இதில் அரசு தேயிலைத் தோட்டத்தில் பணிபுரிகின்ற தொழிலாளர்கள் மற்றும் தனியார் பெருந் தோட்டங்கள், சிறு தோட்டங்களில் உள்ள தொழிலாளர்கள் மற்றும் கூட்டுறவு தேயிலைத் தொழிற்சாலையில் பணிபுரிகின்ற தொழிலாளர்கள் ஆகியோர் அடங்குவார்கள். இவர்கள் கூடலூர் தொகுதி, பந்தலூரிலிருந்து கிட்டத்தட்ட 275 கிலோ மீட்டர் பயணம் செய்து கோவைக்கு வந்துதான் தொழிற் தாவா தொடர வேண்டும். இதனால் மிகுந்த கஷ்டத்திற்குள்ளாகின்றார்கள். அதேபோல், 20 ஆயிரம் ரூபாய்க்கு ஒரு தொழிற் தாவா தொடர வேண்டுமென்றால் அதற்கு 20 ஆயிரம் ரூபாய்க்கு மேலே செலவு செய்ய வேண்டிய நிலைமை இருக்கிறது.*

அதாவது, speedy and inexpensive remedy என்பது அடிபட்டுப் போகிறது. மேலும், நீலகிரி மாவட்டத்தைச் சேர்ந்த 450 தொழிற் தாவா வழக்குகள் கோவையில் நிலுவையில் இருக்கின்றன. இது ஒரு முக்கியமான கேள்வி.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. மு. திராவிடமணி, நீங்கள் ஒரு நாள்கூட கேள்வியை சுருக்கமாகக் கேட்டதில்லை. எப்போதுதான் முடிப்பீர்கள்? எல்லாம் முக்கியம்தான். இரண்டு கேள்வி இருக்கிறது அல்லவா? சுருக்கமாகச் சொல்லுங்கள்.

திரு. மு. திராவிடமணி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இன்றைக்கு கோவையில், நீலகிரி மாவட்டத்தைச் சேர்ந்த 450 வழக்குகள் இருக்கின்றன. கோப்புக்கு எடுக்காத வழக்குகள் 400 இருக்கின்றன. இந்த வழக்குகளை எல்லாம் தீர்க்க வேண்டுமென்றால், நீதி, நேர்மை என்ற வகையில் special reason ஆக எடுத்துக்கொண்டு, அங்கு ஒரு தொழிலாளர் நீதிமன்றம் ஏற்படுத்த மறுபரிசீலனை செய்ய வேண்டும். ஏனென்றால், நீலகிரி மலைப் பகுதி. மலைப் பகுதியிலிருந்து கோவைக்கு வந்து செல்வதற்கு பெரும் கஷ்டப்படுகின்றார்கள். ஏற்கெனவே Camp Court நடந்து கொண்டிருக்கிறது. அது மாதத்திற்கு ஒரு முறை நடக்கிறது. அங்கு அனைத்து வசதிகளும் இருக்கிற காரணத்தினால்தான் Camp Court-ஐ நடத்திக் கொண்டிருக்கிறார்கள். ஆகவே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் இதை மறுபரிசீலனை செய்து, அந்த தொழிலாளர் நல நீதிமன்றத்தை regular court ஆக அமைத்துக்கொடுக்க முன்வருவார்களா என்று தாங்கள்மூலம் அறிய விழைகின்றேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு தொழிலாளர் நலத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு டாக்டர் (திருமதி) நிலோபர் கபில்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கோவை, திருப்பூர், நீலகிரி ஆகிய மாவட்டங்களை ஆட்சி எல்லையாகக் கொண்டு கோயம்புத்தூர் தொழிலாளர் நீதிமன்றம் தற்போது செயல்பட்டு வருகின்றது. இந்த நீதிமன்றத்தில் தற்சமயம் உள்ள நிலவரப்படி, நீலகிரி மாவட்டத்தைச் சேர்ந்த 302 தொழில் தாவா வழக்குகள் மட்டும்தான் நிலுவையில் இருக்கின்றன. மேலும், கோயம்புத்தூர் தொழிலாளர் நீதிமன்றத்தில் நிலுவையில் உள்ள வழக்குகளை விரைந்து முடிக்கும் வகையில், கோயம்புத்தூரில் கூடுதல் தொழிலாளர் நீதிமன்றம் அமைப்பதற்கு

2017 ஜூலை 3]

மாண்புமிகு அம்மா அவர்களின் அரசு ஆணையிட்டுள்ளது. அதன்படி, கோவையில் கூடுதல் தொழிலாளர் நீதிமன்றம் அமைப்பதற்கான பணிகள் சென்னை, நீதிமன்ற பதிவாளர் அவர்களால் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. மேலும், நீலகிரி மாவட்டத்தில் மாதம் ஒரு முறை கோவை தொழிலாளர் நீதிமன்ற முகாம் நீதிமன்றமாகச் செயல்பட்டு வருகிறது. கூடலூரைச் சேர்ந்த தொழில் தாவா வழக்குகளும், நீலகிரி மாவட்டத்தில் நடைபெறும் முகாம் நீதிமன்றத்தில் விசாரிக்கப்பட்டு வருகின்றன. எனவே, நீலகிரி மாவட்டம், உதகமண்டலம் அல்லது கூடலூரில் தொழிலாளர் நீதிமன்றம் புதியதாக அமைக்க வேண்டிய அவசியம் எழவில்லை என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கின்றேன்.

மேலும், தொழிலாளர்களின் பிரச்சினைகள், தொழிலாளர் நலத் துறையின் அலுவலர்கள்மூலம் சமரசப் பேச்சுவார்த்தை நடத்தி உடனுக்குடன் தீர்த்து வைக்கப்படுகின்றன. இதன்மூலம் தொழிலாளர்களின் நலன் காக்கும் அரசாக மாண்புமிகு அம்மா அவர்களின் அரசு திகழ்கிறது (மேசையைத் தட்டும் ஒலி) என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கின்றேன்.

முற்பகல் 11-10

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. திராவிடமணி, மாண்புமிகு அமைச்சர் அவர்கள்தான் விரிவாகப் பதில் சொல்லிவிட்டாரே! உட்காருங்கள். (குறுக்கீடு) சரி, கேளுங்கள்.

திரு. மு. திராவிடமணி: மாண்புமிகு அமைச்சர் அவர்கள், கோவையில் கூடுதல் தொழிலாளர் நீதிமன்றம் ஏற்படுத்தப்படும் என்று சொன்னார்கள். அதை நீலகிரி மாவட்டம், உதகமண்டலத்தில் ஏற்படுத்தித் தந்தால் வசதியாக இருக்கும். ஏனென்றால், அங்குதான் தேவை இருக்கிறது. 450 வழக்குகள் இப்பொழுது பதிவு செய்யப்பட்டிருக்கின்றன. அதேபோன்று, Plantations Labour Act, 1951-ஐ எந்த நிறுவனமும் பின்பற்றுவதில்லை. பிரிட்டிஷ் ஆட்சிக் காலத்தின்போது இந்தச் சட்டத்தை நடைமுறைப்படுத்தினார்கள். ஆனால், தற்போது Plantations Labour Act, 1951-ஐ எந்த நிறுவனமும் பின்பற்றுவதில்லை. உதாரணத்திற்கு, model employer நிறுவனமாக

இருக்கின்ற TANTEA-ல்கூட இச்சட்டத்தை அமல்படுத்துவதில்லை. ஆகவே, Plantations Labour Act, 1951-ஐ அமல்படுத்துவதற்கான நடவடிக்கைகளை அரசு எடுக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்வதோடு, கூடுதல் தொழிலாளர் நீதிமன்றத்தை உதகமண்டலத்தில் அமைப்பதற்குத் தேவையான நடவடிக்கைகளை எடுக்க வேண்டும் என்றும் மாண்புமிகு அமைச்சர் அவர்களை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாகக் கேட்டு அமர்கின்றேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு தொழிலாளர் நலத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு டாக்டர் (திருமதி) நிலோபர் கபில்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, துறை ரீதியாக ஆய்வு செய்து, தேவைப்படும்பட்சத்தில், இதுகுறித்து மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் மேலான பார்வைக்கு எடுத்துச் சென்று, மாண்புமிகு அம்மா அவர்களின் அரசால் பரிசீலிக்கப்படும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா வரிசை எண் 120, மாண்புமிகு உறுப்பினர் திரு. எஸ்.ஆர். இராஜா, மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள்.

120—

சொந்தக் கட்டடம்

***454—திரு. எஸ்.ஆர். இராஜா:**

மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தாம்பரம் தொகுதி, தாம்பரத்திலுள்ள வட்டாரப் போக்குவரத்து அலுவலகத்திற்குச் சொந்தக் கட்டடம் கட்ட அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

மாண்புமிகு திரு. எம்.ஆர். விஜயபாஸ்கர், போக்குவரத்துத் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,